

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.06.2026) சென்னை S.I.E.T. ஸ்போர்ட்ஸ் பெவிலியன் வளாகத்தில் நடைபெற்ற மருத்துவர் பி. பஷீர் அகமது அவர்களின் மகள் டாக்டர் பி.ரீஷ்மான் ஃபஹ்மிதா – டாக்டர் எம்.ஷாஃபயாஸ் ஆகியோரின் திருமண விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.




சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (27.06.2026) மாலை GenZ DMK கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி, அண்ணா நகர், ஆயிரம் விளக்கு, தியாகராயர் நகர், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 27 வயதுக்குட்பட்ட இளம் தலைமுறையினர் பங்கேற்றனர். இந்நிகழ்வின் போது 'படம் பார்த்து கதை சொல்லு', போலி செய்திகளை வெளிப்படுத்தி, உண்மையை சரிபார்க்க Fact check, சமகால அரசியலைப் பகடி செய்யும் Sofa–பேரவை, அரசியல் பதிவுகளை சமூக வலைதளத்தில் வெளிப்படுத்தும் வகுப்பு எனப் பல்வேறு தலைப்புகளின் கீழ் நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. 500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்ற இந்த நிகழ்ச்சி, எழுச்சியுடன் நடைபெற்றது.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாரியம்மன் மற்றும் விநாயகர் கோவில்களின் கருவறையில் முதல்வர் ஜோசப் விஜய் படத்தையும் வைத்து த.வெ.க.வினர் சிறப்பு பூஜை நடத்தியிருக்கிறார்களே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; நடிகராக இருந்து நாடாள வந்தவரை, கோவில் கருவறையில் வைத்துக் கும்பிட்டு வழிபாடு செய்யும் பகுத்தறிவுக்குக் கொவ்வாத கோமாளித் தனத்தை, சேலம் பெரியார் ஜி.பி.சோம சுந்தரம் அவர்கள் பார்க்க நேரிட்டிருந்தால், இரத்தக் கண்ணீரே சிந்தியிருப்பார் !**

**சேலம் பெரியார் சோமசுந்தரம் அவர்களைப் பற்றி, "கழகம் என்றால் துடிதுடிப்பான வாலிபர்கள் மட்டும் கொண்டது இல்லை; அனுபவமும் வயதும் மிக்க சோமசுந்தரம் போன்றவர்களையும் கொண்டது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது நினைவுகூரத்தக்கது !**

### தமிழ்நாடு அரசின் டெல்லி பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட

# கே.வெங்கட நாராயணா நியமனத்தை ரத்து செய்ய வேண்டும்!

### கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் வலியுறுத்தல்!

நாமக்கல், ஜூன் 29–

தமிழ்நாடு அரசின் டெல்லி பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட கே.வெங்கட நாராயணா நியமனத்தை ரத்து செய்து தமிழ்நாட்டை சார்ந்தவரை நியமிக்க வேண்டும் என கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் வலியுறுத்தி உள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு அரசின் டெல்லி பிரதிநிதியாக கர்நாடகாவை சார்ந்த ஜனநாயகன் படத்தின் தயாரிப்பாளர் கே.வெங்கட நாராயணாவை த.வெ.க. அரசு நியமித்திருப்பது வேடிக்கையாகவும், புதுமையாகவும் இருக்கிறது. அமைச்சருக்கு இணையான அதிகாரமிக்க ஒரு முக்கிய பொறுப்பிற்கு முன் அனுபவம் இல்லாமலும், தமிழகத்தை சாராதவரையும் நியமித்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

தமிழ்நாடு அரசு டெல்லி பிரதிநிதி பொறுப்பில் இருப்பவர் தான் மாநில அரசுக்கும், ஒன்றிய அரசுக்கும் இடையில் தொடர்பாளராக இருக்கக்கூடியவர். தமிழ்நாட்டின் தேவைகளை ஒன்றிய அரசிடம் எடுத்துச் சொல்லி கேட்டு பெறக்கூடியவர். தமிழன் என்ற உணர்வோடு இருப்பவர்களால் தான் அந்தப் பணிகளை மனமார, ஆத்மார்த்தமாக செய்ய முடியும். கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள் "சிறுபிள்ளை வைத்த வெள்ளாமை வீடு வந்து சேராது" என்பார்கள். த.வெ.க. அரசின் ஒவ்வொரு செயலும் இது போலத்தான் உள்ளது.

குறிப்பாக கர்நாடக அரசுக்கும் நமக்கும் காவிரியின் குறுக்கே மேகதாது அணைக் கட்டும் விவகாரம் ஒவ்வொரு தமிழருக்கும் உணர்ச்சிபூர்வமான நிலையில் இருக்கும் பொழுது கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ஒருவரை இந்த உயரிய பொறுப்பில் நியமித்திருப்பது தமிழக மக்களின் உணர்வை புண்படுத்தும் செயலாக உள்ளது. திரைப்படத் துறையை விட்டு தமிழகத்தின் வளர்ச்சியில் என்ன செய்யலாம் என்ற சிந்தனையோடு செயலாற்றினால் தான் தமிழகம் வளம் பெறும்.

எனவே டெல்லி சிறப்பு பிரதிநிதியை உடனடியாக திரும்பப் பெற்று தகுதி உள்ள தமிழரை தமிழ்நாட்டின் நலன் கருதி நியமிக்க கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### மேல்மலையனூர் முன்னாள் ஒன்றிய தி.மு.க. செயலாளர் இல. பவுணனின் 28 ஆம் ஆண்டு நினைவு தினம்!

# இலவச கண் சிகிச்சை முகாம் - 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கல்!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்! கண்மணி நெடுஞ்செழியன் தலைமை!

செஞ்சி, ஜூன் 29–

விழுப்புரம் வடக்கு மாவட்டம்மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மேல்மலையனூர் முன்னாள் ஒன்றிய தி.மு.க. கழகச் செயலாளர் இல.பவுணன் அவர்களின் 28 ஆம் ஆண்டு நினைவு தினம் வளத்தி ஊராட்சியில் உள்ளகலைஞர் திருமண மண்டபத்தில் அனுசரிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்குமேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். பூங்காவனம் பவுணன், இளங்கோ லட்சுமி, இராவணன் தமிழரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஒன்றிய தி.மு.க. செயலாளர் இல.பவுணன் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து மறைந்த இல.பவுணன் நினைவு அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமினை தொடங்கி வைத்த அவர் மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள அரசு பள்ளியில் 10, 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களில் பிடித்த 100 மாணவ, மாணவிகளை பாராட்டி சான்றிதழ் களையும், கேடயங்களை மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கி 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

சென்னை வண்டலூர் தாகூர் மருத்துவக் கல்லூரி கண் மருத்துவர் டாக்டர் மனுஸ்ரீ தலைமையிலான மருத்துவர்கள் கலந்து கொண்டு கண் சம்மந்தமானபல் வேறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தனர்

நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முகிலீஸ்வர் நன்றி கூறினார்.

# மதுரை மாவட்டத்தில் தொடர் கொலைகள் - பாலியல் தொல்லைகள்!

மதுரை, ஜூன் 29–

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியைச் சேர்ந்தவர் பால்பாண்டி வயது (26) இவரும் உசிலம்பட்டி நகராட்சி மன்ற துணைத் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகியுமான தேன்மொழி சுந்தரமூர்த்தியின் மகன் கவிக்குமார் வயது (23), கேசவன் வயது (23), கிஷோர் வயது (23) ஆகிய மூவரும் நண்பர்கள் ஆவார்கள்.

இவர்கள் மது குடித்துவிட்டும், போதை பொருட்களை பயன்படுத்தியும் நாள்தோறும் சுற்றி திரிவதாக கூறப்படுகிறது ஏற்கனவே இவர்களுக்குள் முன் விரோதம் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது

இந்நிலையில் பால்பாண்டியை தனிமையில் உசிலம்பட்டி ரயில்வே ஸ்டேஷன் பகுதிக்கு அழைத்துச் சென்று அங்கு ஏற்பட்ட தகராறில் கல்லைப் போட்டு கொலை செய்துவிட்டு மூவரும் தப்பி ஓடி விட்டார்கள்.

இது குறித்து உசிலம்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து காங்கிரஸ் பிரமுகர் மகன் உட்பட மூன்று பேரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றார்கள்.

இதே போல் மதுரை மாவட்டம் மேலூர் அருகில் உள்ள கயிலம்பட்டியைச் சேர்ந்த டிரைவர் நல்லுச்சாமி வயது (55). இவருக்கு மனைவி மற்றும் குழந்தைகள் உள்ள நிலையில் சம்பவத்தன்று வீட்டின் முன்பு உறவினர்களுடன் நல்லுச்சாமி பேசிக் கொண்டிருந்த போது திடீரென அங்கு வந்த அடையாளம் தெரியாத ஒரு மர்ம கும்பல் நல்லுச்சாமியை சரமாரியாக வெட்டி சாய்த்து விட்டு அங்கிருந்து தப்பி ஓடி விட்டார்கள், இதில் சம்பவ இடத்திலேயே நல்லுச்சாமி ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரிழந்தார். இதுகுறித்து மேலூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றார்கள்.

இதனிடையே மதுரை நகரில் உள்ள ஒரு பகுதியில் வசிப்பவர் ஆட்டோ டிரைவர் அமீர் வயது (52), இவர் தனது ஆட்டோவில் நாள்தோறும் பள்ளிக் குழந்தைகளை அழைத்துச் செல்வது வழக்கம்.

இந்நிலையில் ஆட்டோவில் அழைத்து சென்ற 6வயது சிறுமிக்கு தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இதுகுறித்து சிறுமி தன் பெற்றோர்களிடம் கூறியதை தொடர்ந்து அவர்கள் அண்ணா நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரை தொடர்ந்து டிரைவர் அமீரை மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைத்தனர்.



தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 132 வது வட்டக் கழகச் செயலாளர் நா.மோ. முரளி இல்லத் திருமண விழாவில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில் முன்னாள் அமைச்சர் மா. சுப்பிரமணியன், மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு, பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை, கோ.சு. மணி, மற்றும் எஸ்.மோகன், ராஜா அன்பழகன், கோடம்பாக்கம் சத்யா உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.






விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் முன்னாள் ஒன்றிய தி.மு.க. செயலாளர் இல. பவுணனின் 28ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வளத்தி ஊராட்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திரு உருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து கலைஞர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமை தொடங்கி வைத்த அவர் மேல்மலையனூர் ஒன்றியத்தில் 10, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவ – மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.